

அமரர்

# இரத்தினம் சரஸ்வதி

03.02.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ் வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும், இல.332C அந்தோனியார் கோயிலடி, ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# இரத்தினம் சரஸ்வதி

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

31ஆம் நாள் நினைவு மலர்

## 03.02.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வம் சக்தி மயம்

# சமர்ப்பணம்

எங்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாக இருந்து தன்னையே உருக்கி
ஒளியூட்டிய எங்களின் ஆருயிர் தெய்வத்தின்
இனிய நினைவுகளை எங்களின் உதிரங்களில்
சுமந்த வண்ணம் இம்மலரை உமது
பொற்பாதங்களில் மலர் மணம் கமழக்
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



வையகம் மகிழ 06 03 1931

வானகம் போற்ற 04 01 2020

# அமரர்
# இரத்தினம் சரஸ்வதி

## அவர்களின் திதி நிர்ணயம்

ஆண்டு விகாரி மார்கழி மாத பூர்வபட்ஷ
நவமி திதியில் மாதவஞ்சேர் மங்கை
நல்லாள் சரஸ்வதி வள்ளல் உள நிறைவுடனே
உயர் பதம் அடைந்த நாளாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வண்டார்குழ லரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை
தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும் மிகு
வேணுபுர மதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

உடையாள் உற்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதனால் அடியேன் - உன்
அடியார் நடுவு ளிருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடி யெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிகையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குலவிளக்கு இரத்தினம் சரஸ்வதி அவர்களின் வாழ்க்கை எனும் ஓடத்தில்........

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிய அமரர் இரத்தினம் சரஸ்வதி அவர்களின் வாழ்வுத் தடங்களை மீட்டிப்பார்ப்பது இன்றைய 31ஆம் நாள் நிகழ்வில் சாலப்பொருந்தும்.

ஈழத்தின் வடக்கில் அமைந்த யாழ் நகரில் வாதரவத்தை எனும் கிராமத்தில் கந்தையா, சின்னாச்சி தம்பதியரின் ஏழாவது புத்திரியாக 1931.03.06இல் வந்துதித்த சரஸ்வதி அவர்கள் யாழ்/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயின்றார். இவர் அன்னப்பிள்ளை, செல்லமுத்து, தம்பிமுத்து, தங்கம்மா, நல்லபிள்ளை, கனகம்மா, அருந்ததி அவர்களின் உடன் பிறப்பாகத் திகழ்ந்தார். இவர் தம் உறவுகளோடு இன்புற்றிருக்கும் காலத்தில் திருமண வயதை எட்டியதால் இவரின் பெற்றோர் யாழ் வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி தெய்வானை தம்பதியினரின் கடைசி(8ஆவது) மகனான இரத்தினம் என்பவரை 1952இல் மணம் முடித்து வைத்தனர் இவர் தனது குடும்பத்தினருடனும், மைத்துன மைத்துனிகளான அன்னமுத்து, நல்லபிள்ளை, இளையபிள்ளை, இராசையா, இராசம்மா, செல்லத்துரை, பாக்கியம் இவர்களுடனும் இன்புற்று வரும் காலத்தில் நாச்சிமார் அம்மன் அருளால் பன்னிரண்டு பிள்ளைகளை இன்பமாயப் பெற்றனர். மூத்த மகனாக பாரினில் வந்துதித்தான் கந்தசாமி. வாழ்வின் பயனை வளமுடன் உணர்ந்தனர். அடுத்துப் பிறந்த மகேந்திரராசா ஆற்றலில் வல்ல அழகனாய்த் திகழ அடுத்துப் பிறந்தனர் மன்மதராஜன், சிறீதரன், சிறீரதி, ரஞ்சினிதேவி கிரிதரன், பேரின்பநாதன், விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன், தயாபரன், வனஜா ஆகியோர் மழலைச் செல்வங்களாக வந்துதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இன்புற்றிருக்கும் காலத்தில் அன்னாரின் அருமைத்தங்கை அருந்ததியை அன்னாரின் கணவர் மறுமணம் புரிந்தார். இவர்கள் இன்புற்றிருக்கும் வேளையில் தங்கையின் மூத்த மகனாய் தரணியிலே வந்ததித்தான் புவனேந்திரன். அடுத்த வந்தனர் உதயசூரியன், ரோகினி, மகேஸ்வரன், மல்லிகாவதி, சுபாசினி, மோகனராணி இவர்களுடன் இன்புற்று இருக்கும் வேளையில் றோகினியை காலவன் வந்து உனது கணக்கு முடிந்தது என ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டான்.

அன்னாரின் பிள்ளைகள், பெறாமக்கள் திரைகடலோடியும் திரவியம் தேடி எமது குடும்பத்தினர் வையகத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும் என எண்ணி படிப்படியாக விரைந்தனர். மகேந்திரராஜா, மன்மதராஜன், சிறீதரன், சிறீரதி, பேரின்பநாதன், விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன்,தயாபரன் மற்றும் புவனேந்திரன், உதயசூரியன், மகேஸ்வரன், சுபாசினி, மோகனராணி இவர்கள் விரைந்தனர் வெளிநாடு தேடினர் திரவியம் பெறுவதற்கென்று. பிள்ளைகள் அனைவருக்கும் திருமண வயதை எட்டிய காலப்பகுதியில் நல்ல மருமக்களைத் தேடி சீரும் சிறப்புடனும் வாழ வழி வகுத்தார். இவர் பிள்ளைகளுடனும், மருமக்களுடனும், பேரப்பிள்ளைகளுடனும், பூட்டப்பிள்ளைகளுடனும் கூடிக் குலாவி வாழ்ந்து வந்தார்.

இவர் 2018ஆம் ஆண்டு புற்றுநோய் எனும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டு தை மாதம் நான்காம் திகதி இறைபதம் அடைந்தார்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!**

**நம்பிக்கை நிறைந்த ஒருவர்**
**யார் முன்னேயும் எப்போதுமே**
**மண்டியிடுவது இல்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தங்கள் சொல்லும் சோகம்

## கணவர் புலம்பல்

உன் கரம் பிடித்தவன் இங்கிருக்க
பறந்தோடிச் சென்றாயே!
பாரினிலே நான் வாழ
பல்வழிகள் காட்டி நின்றாய்
பக்குவமாயப் பன்னிரன்டு மக்களையும்
பண்போடும் பாசத்தோடும் வளர்த்தாயே!
சிரித்தமுகம் எங்கே?
சிறப்பான வாழ்வெங்கே?
எங்கு சென்றாய்?
என் உயிரே,
ஏங்கித்தவிக்கின்றேன்
எழுந்தோடி வாராயோ.?

கணவர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் புலம்பல்

***கந்தசாமி, மகேந்திரராசா, மன்மதராஜன், சிறிதரன், சிறீரதி, ரஞ்சினிதேவி, கிரிதரன், பேரின்பநாதன், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, தயாபரன், வனஜா.***

அம்மா!!!....அம்மா!!!.....அம்மா!!!.......
ஏன் இந்த வேதனையோ?
எங்களைப் பெற்ற அம்மாவே!
பெற்ற பிள்ளைகள் பன்னிரண்டையும்
கண்ணென வளர்த்த அன்னையே!
முகம் மலர்ந்து சிரிக்கும் சிரிப்பெங்கே?
கள்ளம் கபடம் அற்ற இதயம் எங்கே?
நேர்மையான பேச்சு எங்கே?
எளிமையான எண்ணம் எங்கே?
உங்கள் பாசமுகத்தை நாம் இனி எங்கே காண்போம்?
அன்பு மொழிகளை இனி எப்போ கேட்போம்?
ஆரிடம் சொல்லி அழுதிடுவோம்?
ஆறுதல் தன்னைப் பெற்றிடுவோம்
ஊரையும் உறவையும் விட்டு எங்கு சென்றீர்கள் அம்மா?
ஏங்கித் தவிக்கின்றது எம் இதயம் - அம்மா
என்றும் இறைவன் பாதமே துணை என்று
இறைவனடி சேர்ந்தீர்களே!
இறையருள் பெறுவீரே!!!..........

**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் மருத்துயர்

**செல்வகுமாரி, யோகவதி, இந்திராகாந்தி, புஸ்பலதா,**
**கோவிந்தராஜா, சத்தியமூர்த்தி, திரவியம், சயனலோஜினி,**
**யோகரத்தினம், கலாவிநாயகி, விஜேந்திராதேவி, யுவராசன்**

பெற்றெடுத்த பிள்ளைகள் போல் பெருமை காத்து வந்தீர்
உயர்வாக உமை நினைத்து உயர்வாக நாமிருக்க
பேசாமல் கொள்ளாமல் நீண்ட பயணம் போனதென்ன?
தாயைப்போல் நல்வழிகள் எமக்குரைப்பீர் மாமியே!
தரணியிலே நாம் வாழ பல வழிகள் செய்வீரே மாமியே!
ஆசையுடன் மாமியென அகமகிழும் எமதுள்ளம்
சித்தம் கலங்கி சிறகடித்துத்தான் நிற்க
அமைதியாகச் சென்று ஆண்டவனைச் சேர்ந்திருப்பீர்கள்
என ஆறுதல் அடைகின்றோம்

**மருமக்கள்**

# சகோதரியின் உள்ளக்குமுறல்

அக்கா அக்கா வென அலறும் ஒலி கேட்க
ஒன்றாய் ஓர் காலத்தில் உண்டு வந்தோமில்லையா?
ஒரு வீட்டில் நீள்காலம் ஒருமித்து வாழ்ந்தோம்.
ஆவலுடன் உமைக்காண அருகே வருவேனே!
இன்போடு பேசி நிதம் இன்முகம் காட்டினீர்
இனி உங்கள் இன்முகத்தையோ இனிய
வார்த்தைகளை எப்போ நான் கேட்பதுவோ?
ஏங்கித்தவிக்கின்றேன்-
உன்னாவி பிரிந்ததுவோ?
உன்நாமம் மங்கினதோ?

**சகோதரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளின் அழுகுரல்

எங்கள் அன்பு அம்மம்மாவே அப்பம்மாவே
எங்கெல்லாம் தேடுகின்றோம் கிடைக்கவில்லையே!
இன்னும் சிலகாலம் எம்முடன் கூடி மகிழ்ந்திடவோ
எமக்கு பலனில்லை நீங்கள் உறவாடி
மகிழ்ந்த அன்பு முகம் தெரியாதே
உங்கள் குரல் கேட்டிடவும் கதைகள் கேட்டிடவும்
உள்ளம் ஏங்கிறதே - எங்களைப்பிரிய விதிதான்
வந்ததுவே. தவிக்கின்றோம்,துடிக்கின்றோம்
தேடுகின்றோம் ஒடி வருவீர்களா?
உங்கள் அன்பு முகத்தை நாம் காண...

**பேரப்பிள்ளகள்**

# பூட்டப்பிள்ளைகள் கதறல்

மழலைமொழி கேட்டு மகிழ்ந்திடுவீர் - பாட்டியே
இனிய பல கதைபேசி எமை சிரிக்க வைக்கும் - பாட்டியே
பாராட்டி, சீராட்டி பாசத்துடன் பார்த்தீர்கள்
காலனவன் காலடியில் ஏன் சென்றீர்? - பாட்டியம்மா
எப்போ வருவீர்கள் வருவீர்கள் என வாசலுடன்
நாம் எல்லாம் ஏங்கித் தவிக்கின்றோம்
எப்போ வருவீர்கள்?
இனிய பல கதை சொல்ல.......

**பூட்டப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேறாமக்கள் பெருந்துயர்

பெற்ற பிள்ளைகளைப் போல்
பிரியமுடன் - வளர்த்தீர்கள்
பெருமையுடன் ஆதரித்தீர்கள் - பெரியம்மாவே
தனியாகச் சென்றீரே! தவியாய் தவிக்கின்றோம்
எமைப் பாராட்டி சீராட்டி பார்த்தெடுத்த பெரியம்மாவே
நாம் இனி எப் பிறப்பில் காண்போம் உமை?

பேறாமக்கள்

# உற்றார் உறவினர் புலம்பல்

வாழ்விது மாயம் என்பது நாட்டி
வல்ல இறைபதம் நாடியே சென்றாரே!
மாண்புறு மக்களை சுற்றம் நினைத்தாரோ?
உற்றபேரை உடன் நினைத்தாரோ?
ஏது நினைத்து உயிர் துறந்தாரோ?
யாதும் அறியாத நிலையது தன்னில்
அத்தனையுறவும் அலறித்துடிக்க
இம்மை வாழ்வை இகழ்ந்தே
ஈசன் பாதமலர் பேறு பெற்றாரே.

உற்றார், உறவினர்



*அடி முடி தேடினாலும்*
*அகராதியைப் புரட்டினாலும்*
*முழுமையான அர்த்தம்*
*அறிய முடியாத உயிர்ச் சித்திரம்*
*அம்மா !!!!!.......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழுங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொழியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே சகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரிகாப்பு



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகி'ாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரணை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



**காலம் முழுவதும்
உன்னை வயிற்றிலும்
மடியிலும், தோளிலும்,
மார்பிலும் சுமப்பவள்
தாய் மட்டுமே - அவளை
என்றும் மனவில்
சுமப்போம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

### காப்பு
### நேரிசை வெண்பா
திருச்சிற்றம்பலம்

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா
**அமரரிடர் தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**
**(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரஹறண நிறநிற நிறென
வசர ஹறணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டகுடகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனாங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் – சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

## மனித தர்மம்

| | | |
|---|---|---|
| கோபத்திலும் | - | பொறுமை |
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

01.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

02.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேவன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.!

03.

முத்தன்ன வெண் நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியர் பாடாரோ நஞ்சிவனை!
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ!
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ!
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்!
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப்முப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

05.

மாலறியா நான்முகனும் காணாமலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிநீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக்கோதாட்டும்
சீலரும் பாடிச் சிவனே சிவனேயென்
ஓல மிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

06.

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றதும் நாணாமே
போன திசைபகராய் இன்னமும் புலர்ந்தின்றோ!
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தம்கோனைப் பாடலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றேவாய் திறப்பாய்
தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னுந்துயிலுதியோ!
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.!

08.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.!

09.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசேதொழும் பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே உமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.
பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந்துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.!

11.
மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து கிடைத்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல் போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்!
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

12.
ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்பாவார் கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூத்திகமும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.
பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்பைம் போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலர்கமுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போற்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்குப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.!

14.
காதார் குழையாடாப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளாமாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.!

15.
ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள் விண்யோரைத்தான்பணியாள்
பேரரையாற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவம் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம் புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.
முன்னிக்கடலை சுருக்கியெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னைப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

17.
செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக்கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கன் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

18.
அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மனித்தொவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப்பிறங் கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோர் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுந் காணற்க
இங்கிப் பரிசேயெமக் கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய்

20.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாந் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குத் தோற்றாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாதபுண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**



குறள்:

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரத் பாற்று

பொருள்:

உலகத்தை வாழ வைப்பது மழையாக
அமைந்திருப்பதால் அதுவே அமிழ்தம்
எனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

01) அறிவுள்ள மனிதர்களுடன் உரையாடு
அறிவில்லாத மனிதர்களோடு உறவாடு
ஆனால் பண்பில்லாதவனைக் கண்டால் ஒதுங்கிடு.

02) ஒரு வினாடியில் நாம் செய்யும் தவறு
வாழ்க்கை முழுவதும் வேதனையைத் தேடித் தருகின்றது

03) அயலவனை நேசி அதற்காக அவனையும், உன்னையும் பிரித்து
வைக்கும் வேலியைப் பிடுங்கி விடாதே

04) ஒருவன் இறந்த பின் அவனுக்கு அன்னமாய், அமுதாய்
படைப்பதை விட அவன் இருக்கும் போது அவனை நன்றாய்
பராமரிப்பதுதான் சிறந்த கடமை

05) துன்பங்களை உன்னிடத்தில் குடி வைக்காதே
அது உன்னை இறுதியாய் அழித்துவிடும்.

06) யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால்
உன்னை நீ திருத்திக் கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப்
பொருட்படுத்தாமல் விட்டு விடு.

07) ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு
இதமளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது

08) உட்பகையை விட வெளிப்படையாகக் கழந்து கொள்வது நல்லது

09) தமக்கு நல்லது என்று கருதாததை பிறருக்குச் செய்யாமல
இருப்பவரே சான்றோர் ஆவார்.

10) மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ மட்டும் ஏணியில் ஏற
முயற்சிக்காதே.

11) உனது எதிரியை அச்சுறுத்தும் வலுவான ஆயுதங்கள் உன்
மௌனமும் பொறுமையும் தான்.

12) பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ
நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில பயனுள்ள அறிவு கேள்வி பதில்கள்

01. ஒரு தடவை கூட லோக் சபாவிற்கு செல்லாத இந்திய பிரதமர் யார்?
திரு. சரண்சிங்

02. உலக சுற்றுச்சூழல் தினம் எப்போது கடைப்பிடிக்கப்பட்டது?
ஜூன் 5

03. மனித உடலில் வியர்க்காத பகுதி எது?
உதடு

04. ஒரு ஹெக்டார் என்பது எவ்வளவு ஏக்கர்?
கிட்டத்தட்ட 2.5 ஏக்கர்

05. வேர்க்கடலையின் அறிவியல் பெயர் என்ன?
அராக்கிஸ் ஹைறபோஜியா

06. பஞ்ச தந்திர கதைகளை எழுதியவர் யார்?
விஸ்ணு சர்மா

07. வருடத்தின் ஒரே நாளில் 24 மணிநேரத்தில் பகலும், இரவும் சரியாக 12 மணிநேரம் மட்டும் வருவது எந்த நாளில்?
மார்ச் 21

08. மனித தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?
22

09. ஈக்களில் சுவை உணர் உறுப்பு எது?
நாக்கு

10. தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நூல் எது?
மோகனாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தலைவர்கள் எழுதிய நூல்கள்

- Hindu Swaraj - மகாத்மா காந்தி
- Discovery of India - ஜவர்ஹலால் நேரு
- Indian Struggle - சுபாஷ் சந்திரபோஸ்
- India Divided - இராஜேந்திர பிரசாத்
- Unhappy India - லாலா லஜபதி ராய்
- Wake Up India - அன்னி பெசன்ட்
- Indian in Transition - எம்.என்.ராய்
- India Wins Freedom - மௌலானா அபுல் கலாம் ஆஸாத்
- War of Indian Independencs - வி.டி.சவார்க்கர்
- An Idealist View of Life - டாக்டர் ராதாகிருஷ்ணன்
- My Truth - இந்திராகாந்தி
- My Life and Times - வி.வி.கிரி
- India 2020 - A Vision for the New Millennium - ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் & Dr.Y.S.Rajan
- Ignitedminds - ஏ.பி.ஜெ.அப்துல்கலாம்

## ஆங்கில இலக்கியம் :


- Paradise lost - ஜோன் மில்டன்
- Paradise Retained - ஜோன் மில்டன்
- The Tale of Two Cities - சார்ல்ஸ் டிக்கன்ஸ்
- David Copperfied - சார்ல்ஸ் டிக்கன்ஸ்
- Oliver Twist - சார்ல்ஸ் டிக்கன்ஸ்
- Great Expectations - சார்ல்ஸ் டிக்கன்ஸ்
- Conterberry Tales - ஜியோஃபரி சாஸர்
- Remeo and juliet - வில்லியம் ஷேக்ஸ் பியர்
- Antony and Cleopatra - ஷேக்ஸ்பியர்
- The Tempest - ஷேக்ஸ்பியர்
- Macbeth - ஷேக்ஸ்பியர்
- king lear - ஷேக்ஸ்பியர்
- A Midsummer Night's Dream - சேக்ஸ்பியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


அமரர் திருமதி இரத்தினம் சரஸ்வதி ஆகிய எமது குடும்பத்தின் குலவிளக்கு 2020.01.04 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டவுடன் பொங்கும் அன்பால் அருகிருந்து போற்றலுரு பணி செய்தோர். தொலைதூரமிருந்து வந்தோர். தொலைபேசி அனுதாபம் செய்தோர், கண்ணீர் அஞ்சலிகளால் துயர் பகிர்ந்தோர், தோழமைக்குத் தோள் கொடுத்த நண்பர்கள், உற்றார், உறவினர், ஊரவர் மற்றும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் பங்கு கொண்டவர்களுக்கும் இம்மலரை சிறப்பாக வெளியிட்ட வேழன் பதிப்பகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




* அமரர்களை குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் சொந்தங்கள்
அணைத்திட இருந்தாலும்....
அன்னையே
உம்மைப் போன்று
அன்பு செய்ய
யாருமில்லை
இவ் உலகில்

நான் பார்த்த முதல் முகம்!
நான் பேசிய முதல் வார்த்தை
நான் மறக்கவே
முடியாத முதல்
ஓவியம்
எங்கள் அம்மா....



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org